வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 128/2019

வழக்கு சாட்சி LW4 /PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலா | ஜாதி | |
| கணவர்/தந்தை | பழனி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 57 |

தேதி 12.03.2025

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மாதவரம் பகுதியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. இவ்வழக்கின் புகார்தாரரான மல்லிகா மற்றும் ராதா, நந்தினி ஆகியோர்களை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. ஆஜர் எதிரிகளை இதற்கு முன் நான் பார்த்ததில்லை.

அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க சாட்சி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிஅளிக்கப்பட்டது.

கடந்த 26.07.2019 இரவு சுமார் 8.15 மணிக்கு எனது எதிர் வீட்டில் குடியிருந்த மல்லிகா என்பவர் வீட்டிற்கு 3 நபர்கள் கலாட்டா செய்து அங்கிருந்த மல்லிகா, ராதா, நந்தினி ஆகியோரை கையால் அடித்து காலால் உதைத்து சென்றுவிட்டார்கள் என்றும், நான் மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும், போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.